# இறக்காமம் பிரதேச சபை
# அம்பாறை மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 02 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை 2012 செப்டெம்பர் 6 ஆம் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, ,றக்காமம பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ,றக்காமம பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் பிரிவு 172(2)இற்கு அமைய கணக்காய்வுக் கட்டணத்துக்கான ஒதுக்கம் நிதிக் கூற்றுக்களில் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2011 டிசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த காலப்பகுதியின்போது சபையின் வருமானத்திலும் கூடிய மீண்டுவரும் செலவினம் ரூபா 267,647 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் நிதிக் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் அரசிறை நிலுவையாகவுள்ள பொதுச் சந்தை, இறைச்சிக் கடைகள்,கோழி இறைச்சிக் கடை வருமானம் ரூபா 530,210 ஆகும். இவற்றை அறவீடு செய்வதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெறுமதி சேர் வரி (VAT) ரூபா 237,998 இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்படாமல் வைப்புக் கணக்கில் காணப்படுகின்றது.

### 2.3 வருவாய் நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருவாய், உள்ளவாறான வருவாய் மற்றும் நிலுவை வருவாய்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருவாய், உள்ளபடியான வருவாய், நிலுவை வருவாய் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (ii) | வாடகை | 995 | 796 | 1,036 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 120 | 305 | -- |
| (iv) | ஏனைய வருமானம் | 140 | 47 | -- |

### 2.3.2 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 82,500 ஆகும், முத்திரைத் தீர்வை ரூபா149,916 ஆகும்.

### 2.4 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்டமற்றும் உள்ளவாறான பதவியணியினர்**

2011 டிசம்பர் 31இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிகப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினர் விபரம் கீழேதரப்பட்டுள்ளது.

| பதவிகளின் வகை | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளவாறானது |
|---|---|---|
| பதவிநிலைத் தரம் | 01 | |
| துணைத்தரங்கள் | 08 | 12 |
| ஆரம்பதரத்தினர் | 10 | 09 |
| | **19** | **21** |

### 2.5 உள்ளகக் கணக்காய்வு

சபையில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிருவாகம்